**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No.67/2020**

| | | |
|---|---|---|
| L.W.1 P.W.:1 | | |
| D.W. : | | |
| Name : | **சதீஷ்குமார்** | Caste : |
| Father's Name : | சன்னாசி | Calling : |
| Village: | | Religion : |
| Taluk : | | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.11.2021.

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது வேதாரண்யம் வனச்சரகத்தில் கோடியக்காடு பிரிவு வனவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 30.12.2019ஆம் தேதி காலை 10 மணியளவில் வனக்காப்பாளர் முனியசாமியுடன் பன்னாள் காப்புக்காட்டிற்கு தணிக்கைக்காக எனது இருசக்கர வாகனத்தில் சென்று காப்பு காட்டில் வாகனத்தை நிறுத்திவிட்டு இருவரும் காப்பு காட்டில் நடந்து சென்றபோது ஒருவர் கையில் ஒற்கைக்குழல் நாட்டுதுப்பாக்கி ஏர்கன்னுடன் அங்கு வனவிலங்குகளை வேட்டையாடி முயற்சி செய்து கொண்டிருந்தார். அவரை நாங்கள் இருவரும் சுற்றி வளைத்து பிடித்து அவரை விசாரணை செய்தேன். அப்போது அவர் தன்னுடைய பெயர் ராஜா த/பெ.ஜெயபால், ஆயக்காரன்புலம் என்று கூறினார். மேலும் விசாரித்தபோது அவர் காட்டிலுள்ள வன உயிரினங்களை வேட்டையாடுவதற்காக வந்ததாக குற்றத்தை ஒப்புக்கொண்டார். ஒப்புதல் வாக்குமூலமாக நான் பதிவு செய்தேன். பதிவு செய்ததற்காக நான் அதில் கையொப்பம் செய்துள்ளேன். முனியசாமி அதில் சாட்சியாக கையொப்பம் இட்டார். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியின் கையொப்பம் பெறப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1. சம்பவ இடத்திலேயே என்னால் மகஜர் தயார் செய்யப்பட்டு எதிரியிடமிருந்து ஒற்றைக்குழல் நாட்டு துப்பாக்கி ஏர்கன், துப்பாக்கி குண்டுகள் 97-ம் என்னால் கைப்பற்றப்பட்டது. மகஜர் அ.த.சா.ஆ.2. அதில் சாட்சியாக முனியசாமியிடம் கையெழுத்து

பெற்றேன். எதிரியின் கையெழுத்தும் பெறப்பட்டது. உரிய எச்-நமூனாவில் பிடிபொருட்களை கைப்பற்றி எதிரியை சம்பவ இடத்தில் கைது செய்து எனது இருசக்கர வாகனத்திலேயே வனச்சரகம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்து பிடிபொருள்களை படிவம் - 91 மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைப்பு செய்தேன். அந்த படிவம் -91 அ.த.சா.ஆ.3. எச்-நமூனா அ.த.சா.ஆ.4. எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பிடிபொருளான ஒற்றைக்குழலான நாட்டுதுப்பாக்கியான ஏர்கன்னை நீதிமன்ற உத்தரவின் படி நாகப்பட்டினம் ஆயுதப்படை கிடங்கில் என்னால் ஒப்படைக்கப்பட்டது.

(வழக்கு தடயத்தை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது.)

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 67/2020**

| L.W. 2 P.W.: 2 | | |
|---|---|---|
| D.W. : | | |
| Name : | **முனியசாமி** | Caste : |
| Father's Name : | திருக்கண்ணன் | Calling : |
| Village: | | Religion : |
| Taluk : | | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.11.2021.

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது வேதாரண்யம் வனச்சரகத்தில் பஞ்சநதிக்குளம் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். **30.12.2018**ஆம் தேதி காலை சுமார் **10** மணியளவில் நானும், வனவர் சதீஷ்குமார் அவர்களுடன் பன்னாள் காப்புக்காட்டிற்கு பாதுகாப்பு பணிக்காக சென்றிருந்தோம். பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது விசாரித்து தெரிந்துகொண்ட ராஜா த/பெ.ஜெயபால், ஆயக்காரன்புலம் என்பவர் வேட்டையாடும் நோக்கத்தில் நாட்டுத்துப்பாக்கியை கையில் வைத்துக்கொண்டு பன்னாள் காப்புக்காட்டு பகுதியில் இருந்தார். அவரை சுற்றி வளைத்து பிடித்து வனவர் விசாரணை செய்தபோது எதிரி வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக துப்பாக்கியுடன் வந்ததாக சொன்னார். எதிரி சொன்னதை வனவர் பதிவு செய்துகொண்டார். அது குற்றஒப்புதல் வாக்குமூலம். அதில் நான் சாட்சியாக கையெழுத்திட்டேன். அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.**5**. பின்பு வனவர் எச்-நமுனா தயார் செய்தார். பிடிபொருள்களுக்கு மகஜர் தயார் செய்தார். மகஜரில் நான் சாட்யாக கையொப்பமிட்டேன். அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.**6**. அதன்பிறகு எதிரி மற்றும் பிடிபொருளுடன் வனசரக அலுவலகம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. வனச்சரக அலுவலர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 67/2020**

| | | |
|---|---|---|
| L.W. 3 P.W.: 3 | | |
| D.W. : | | |
| Name : | **அய்யூப்கான்** | Caste : |
| Father's Name : | பாட்சா | Calling : |
| Village: | | Religion : |
| Taluk : | | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.11.2021.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்பொழுது வேதாரண்யம் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 30.12.2018 வழக்கு சம்பந்தமாக ஆவணங்கள் அடிப்படையிலும் மற்றும் விசாரணையிலும் அரசு சாட்சிகளான வனவர் சதீஷ்குமார் வனக்காப்பாளர் முனியசாமி வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்து வழக்கை புலன்விசாரணை செய்து எதிரி ராஜா த/பெ.ஜெயபால், ஆயக்காரன்புலம் என்பவர் மீது ஏர்கன்னை வைத்து வனஉயிரினங்களை வேட்டையாட முயன்ற குற்றத்திற்காக அவர் மீது என்னால் ஏ-படிவம் 22.07.2020ஆம் தேதி இந்திய வனஉயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 2, 16, 35, 36, 37, 37(9), மற்றும் 39, 50, 51, 52, 54, 57 ஆகிய பிரிவுகளின்படியும் மற்றும் தமிழ்நாடு வனச்சட்டம் 1882 பிரிவு 21(d) (h) 56-ன் படி நீதிமன்றத்தில் ஏ-படிவம் மூலமாக புகார் தாக்கல் செய்துள்ளேன். எதிரி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை.</u>